## குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :- | **O.S.No.193/2015** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | :- | **வா.சா- 02 ( PW-02 )** |
| **பெயர்** | :- | **சித்தையன்** |
| **தேதி** | :- | **10-02-2026** |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை :-**

நான் 10-ஆம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு 60 வயதாகிறது. என்னுடைய முதல்விசாரணையில் தாக்கல்செய்துள்ள நிருபண ஆணை -யுறுதியில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தான்சொல்லி தயாரிக்கப்பட்டது. அதன் உள்ளடக்கங்கள் எனக்குத் தெரியும். 10-ஆம் பிரதிவாதி மருத்துவர் என்றால் சரிதான். 10-ஆம் பிரதிவாதி என்ன சட்டவிரோதமான செயலை செய்திருக்கிறார் என்று கேட்டால் வாதிகளின் சொத்தை சுவாதீனத்தில் வைத்திருக்கிறார்.

10-ஆம் பிரதிவாதியும் அவருடைய குடும்பத்தாரும் ஏற்கனவே யாருடைய சொத்துகளை அபகரித்திருக்கிறார் என்று நான் கூறுகிறேன் என்றால் ஆறுமுகம், எல்லப்ப கவுண்டர் வகையறாவின் பிரச்சனையான சொத்துக்களை வாங்கியுள்ளார். அந்த கிரயப்பத்திரங்களை நான் படித்து பார்க்கவில்லை. நான் சொன்ன 10-ஆம் பிரதிவாதியின் சுவாதீனம் என்பது அந்த இடத்தில் அவர் Mill வைத்திருக்கிறாரா என்றால் இல்லை. கொட்டகை போட்டுள்ளார். வழக்குச் சொத்தின் ஒருபகுதி சம்மந்தமாக 10-ஆம்

பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள கிரயப்பத்திரத்தை நான் படித்து பார்க்க -வில்லை. 10-ஆம் பிரதிவாதி என்ன பொய்யான ஆவணங்களை தயார் செய்துள்ளார் என்றால் கிரயப்பத்திரங்களை தயார்செய்துள்ளார். நான் அதை படித்து பார்க்கவில்லை.

நான் கிராம நிருவாக அலுவலராக பணிபுரிந்தேன் என்று காட்ட ஆவணங்கள் எதையும் தாக்கல்செய்யவில்லை. எனக்கு இந்த வழக்கில் சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. பெரியசாமி சாட்சி சொல்ல அழைத்தார்.

வழக்கு சொத்துக்கள் ஆரம்பத்தில் முத்துசாமி என்கிற மாரிமுத்து கவுண்டருக்கு சொந்தமானது என்றால் சரிதான். அவருக்கு பெரம்பா கவுண்டர், பெரியதம்பி, பரமசிவம் என்கிற மூன்று மகன்கள் என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதிகள் பெரம்பா கவுண்டர் வழிவந்தவர்கள் என்றால் சரிதான்.

முத்துசாமி என்கிற மாரிமுத்து கவுண்டரும் அவருடைய மூன்று மகன்களும் சேர்ந்து இராஜமாணிக்கம் பிள்ளை என்பவரிடம் 7,000/- உரூபாய் கடன் வாங்கிகொண்டு 03.12.1969-ஆம் தேதியன்று கொதவை அடைமானம் வைத்தார் என்றால் அது எனக்குத் தெரியாது. அவர்கள் கடனை அடைக்காததால் சேலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் முதலேற்பு வழக்கு எண் 2629/1981 என்ற வழக்கு தொடுக்கப்பட்டு அடைமான சொத்தை விற்க தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு 27.09.1984-ஆம் தேதியன்று அந்த சொத்து நீதிமன்ற ஏலத்தில் விற்கப்பட்டது என்றால் அது எனக்குத் தெரியாது.

ஏலத்திற்குபின் உரிய காலத்திற்குள் பெரியதம்பியும் பரமசிவமும் மட்டும் தீர்ப்பாணை தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்து நீதிமன்ற ஏலத்தை இரத்து செய்து சொத்தை மீட்டனர் என்றால் மூவரும் சேர்ந்து மீட்டதாக பரமசிவம் சொன்னார். மூவரும் சேர்ந்து பணம் செலுத்தினார்கள் என்று காட்ட நான் ஆவணம் எதையும் பார்க்கவில்லை.

அதன்பிறகு பெரியதம்பியும் பரமசிவமும் மட்டும் அந்த சொத்தை பதிவுசெய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலம் 01.07.2004-ஆம் தேதியன்று பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் பெரியதம்பிக்கு ஒதுங்கிய பாகத்தில் இருந்து 10-ஆம் பிரதிவாதி 07.11.2007-ஆம் தேதியன்று ஒருபகுதியை கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். 10-ஆம் பிரதிவாதி எந்தெந்த புல எண்ணில் எவ்வளவு பரப்பளவில் சுவாதீனம் கொண்டுள்ளார் என்று எனக்கு குறிப்பாக தெரியாது. நிரூபண பிரமாண பத்திரத்தில் என்னுடைய வயது 58 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் எவ்வித முகாந்திரமும் இல்லாமல் 10-ஆம் பிரதிவாதிக்கு எதிராக முதல்விசாரணையில் பல அவதூரான விடயங்களை சொல்லி -யுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் வாதிகள் ஏற்கனவே இதே சொத்தை பொறுத்து சேலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பெரியதம்பி வகையறாவினர் பெயரில் வழக்கிட்டு அந்த வழக்கில் 08-ஆம் பிரதிவாதியாக இந்த வழக்கின் 10-ஆம் பிரதிவாதி அருண் இருந்த நிலையில் அந்த வழக்கை வாதிகள் நடத்தாமல் விட்டுவிட்டனர் என்றால் சரிதான். 10-ஆம் பிரதிவாதி மருத்துவர் என்பதால் அவர்மீது வழக்கிட்டு அவதூரான தகவல்களை சொல்லி அவரிடம் பணம் பறிக்கும் நோக்கத்தில்

வாதிகளுடன் நானும் கூட்டு சேர்ந்து  பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District & Session Judge,
Salem.